<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 191/2016 | சாட்சி | வா.சா.2 |
| பெயர் | சுந்தரம்மாள் | நாள் | 25.03.2025 |
| கணவர் பெயர் | மாதையன் | | |

**<u>3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை:–</u>**

1) இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றாலும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க தற்போது சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றாலும், சரிதான். வாதி எனக்கு உறவினரா என்றால், இல்லை. வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால், பழக்க, வழக்கத்தின் அடிப்படையில் எனக்கு தெரியும். என் வீட்டிற்கும், வாதியின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், 2 கி.மீட்டர் தூரம் இருக்கும்.

2) வாதி குடியிருக்கும் பகுதிகளில் முறையாக அரசாங்கத்திடம் கட்டிட அனுமதி வாங்கிதான் அங்கு வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். தற்போது வாதி குடியிருக்கும் பகுதியில் சிவில் சப்ளை குடோன் உள்ளதா என்றால், தற்போது இல்லை. எடுத்துவிட்டார்கள். 1, 2 பிரதிவாதிகள் மேற்படி பகுதியில் வீடு கட்டி வசித்து வருகிறார்கள் என்றால், சரிதான். ஆனால், குடோனையும் வாடகைக்கு விட்டுள்ளனர். என் பிரமாண பத்திரிக்கையில் குடியிருப்பு நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட சாலையில், வணிக நோக்கத்திற்காக பயன்படுத்துகிறார்கள் என சொல்லியுள்ளது தவறானது என்றால், சரியல்ல. பொதுவாக சாலை அமைக்கப்பட்ட அதில் வண்டி, வாகனங்கள் சென்று வரலாம் என்றால், சரிதான்.

3) மேற்படி குடோன் பொதுமக்களுக்கு குடிமை பொருட்கள் வழங்குவதற்காக மேற்படி பொருட்களை பாதுகாக்க அமைக்கப்பட்ட பண்டககிடங்கு என்றாலும், எந்த வணிக நோக்கத்திறக்காகவும் மேற்படி குடோன் செயல்படவில்லை என்றாலும், அது குறித்து எனக்கு தெரியவில்லை. இவ்வழக்கின் நோக்கமே மேற்படி குடோனை

எடுக்கவேண்டும் என்பது தான் என்றாலும், தற்போது மேற்படி குடோன் மாற்றப்பட்டுவிட்டது என்பதால், இவ்வழக்கே நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், சரியல்ல.

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.